# +1 தமிழ் முதல் தாள் - 3 மற்றும் 5 மதிப்பெண் வினா-விடைகள்

1. **குறிப்பு வரைக.**

**அ) தாயுமானவர்**

பிறந்த ஊர் : திருமறைக்காடு
காலம் : கி.பி 18ஆம் நூற்றாண்டு
பெற்றோர் : கேடிலியப்ப பிள்ளை – கெஜவல்லி அம்மையார்
பெயர்க்காரணம் : திருச்சிராப்பள்ளி தாயுமானவப் பெருமான் அருளால் பிறந்தமையால் இப்பெயர் பெற்றார்.
மனைவி பெயர் : மட்டுவார் குழலி (இவரை மணந்தும் இல்லற வாழ்வில் பற்றின்றி இருந்தார்)

**சிறப்பு:**

- ❖ தம்முடைய ஞானாசிரியர் மௌனகுரு என்பாரிடம் உபதேசம் பெற்றுத் துறவு பூண்டார்.
- ❖ இவருடைய பாடல்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவை.
- ❖ "தாயுமானவர் பாடல்கள்" என்னும் தலைப்பில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 1452 ஆகும்.
- ❖ இவரது பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் என அழைக்கப்படுகிறது.

**ஆ) நீ.கந்தசாமிப் புலவர்**

பிறந்த ஊர் : பள்ளியகரம்
பிறப்பு : 09-06-1898
பெற்றோர் : நீலமேகம் பிள்ளை - சௌந்திரவல்லி அம்மையார்
படிப்பு : பள்ளி இறுதி வகுப்பு வரை
கற்றறிந்த மொழிகள் : ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீன், வடமொழி.

**சிறப்புகள்:**

- ❖ பன்மொழிப் புலவராய் விளங்கினார்.
- ❖ கரந்தை தமிழ்ச்சங்கத்தில் பல ஆண்டுகள் அமைச்சராய் இருந்தார்.

**இயற்றிய நூல்கள்:**

- ❖ ஆங்கிலத்திலும் தமிழிலும் பலநூல்கள் இயற்றியுள்ளார்.
- ❖ "பள்ளியகரம் பழங்கதை" என்னும் தலைப்பில் பாடல்கள் எழுதியவர்.
- ❖ தாமஸ்கிரே என்பாரின் ஆங்கிலக்கவிதையை இரங்கற்பா என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்தவர்.

**இறப்பு** : 18-06-1977

**இ) சுப்பிரமணிய பாரதியார்**

பிறந்த ஊர் : திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம்
பிறப்பு : 11-12-1882
பெற்றோர் : சின்னசாமி ஐயர்-இலக்குமி அம்மையார்

**ஆற்றிய பணிகள்:**

- ❖ எட்டயபுர மன்னரின் அரசவைப்புலவர்
- ❖ மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்
- ❖ சக்கவர்த்தினி பத்திரிக்கை ஆசிரியர்
- ❖ 'இந்தியா' என்னும் வாரப்பத்திரிக்கை ஆசிரியர்

**சிறப்புகள்:**

- ❖ இவர்தம் பாடல்கள் விடுதலை வேட்கையை மக்கள் மனதில் தோன்றச் செய்தன.
- ❖ தமிழுக்கு வளஞ்சேர்க்கும் பல இலக்கியங்களைப் படைத்துள்ளார்.
- ❖ கீதையை மொழி பெயர்த்துள்ளார்.
- ❖ கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய முப்பெரும் காப்பியங்களை இயற்றினார்.

**இறப்பு** : 11-09-1921

2. **இறைவன் இயல்புகளாகத் தாயுமானவர் தெரிவித்துள்ளன யாவை?**

**இறைவன் இயல்புகளாகத் தாயுமானவர் கூறுவன:**

- ❖ இறைவன் அருளுருவாய் பழுத்துள்ள பழத்தின் சுவையானவன்.
- ❖ கரும்பாகவும், தேனாகவும், அமிர்தமாகவும் அடியவர்க்கு இனிப்பவன்.
- ❖ கண்ணைப்போல இன்றியமையாதவன்.
- ❖ உலகில் கிடைத்தற்கு அரிய பொருளனைத்தும் தரும் சிறந்த பொருளானவன்.
- ❖ கருணை நீங்காமல் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளானவன்.தூய்மையான வாழ்க்கையானவன்.
- ❖ நினைக்க இயலாத கருத்துகளுக்குள் கருத்தாய் அமைந்திருப்பவன்.
- ❖ காலம், இடம், நிகழ்ச்சிகளை வகுத்து, மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லாக் கருவிகளையும் படைத்து உயிர்கூட்டத்தை இயக்கிக் கொண்டிருக்கும் மேலான பொருளானவன்.

**3. நீ. கந்தசாமிப் புலவர் அவர்கள் தமிழ்த்தாயின் பெருமையை எங்ஙனம் போற்றிப் புகழ்ந்துள்ளார்?**

- ❖ உலகில் தோன்றிய பழங்கால மக்கள் தம் உள்ளக் கருத்தை மற்றவர்க்குக் கைச்சைகைகளால் தெரிவித்து வந்தனர்.
- ❖ அக்காலம் நீங்கிட, தமிழ்மக்கள் மெல்ல நாவையசைத்துப் பேசுமாறு செய்த தமிழ்த்தாயின் திருவடிகளில் தலைவைத்து ஏத்திப்பணிவோம் என நீ. கந்தசாமிப்புலவர் அவர்கள் தமிழ்த்தாயின் பெருமையைப் போற்றிப்புகழ்ந்துள்ளார்.

**4. பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத்துள்ளார்?**

எங்கள் தாயாய் விளங்கும் பாரதத்தாயே!

- ❖ நீ எல்லாச் செல்வங்களையும் நிரம்பப் பெற்றுள்ளாய்.
- ❖ உனக்கு நிகர் எவரும் இலர்.
- ❖ நீ எத்தகைய தீங்குமற்று விளங்குகிறாய்.
- ❖ நீர்வளமும், நில வளமும், வயல்வளமும் நிரம்பப் பெற்றுள்ளாய்.
- ❖ வயல் வளத்தால் பசுமையாய் விளங்குகிறாய்.
- ❖ மிக்க இன்பமுடையாய்.
- ❖ நீங்காத புன்சிரிப்பு உடையாய்.
- ❖ பலவகை அணிகளைப் பூண்டு அழகாய் விளங்குகின்றாய்.
- ❖ இத்தகைய நலன்கள் யாவும் பெற்று, இவ்வுலகில் தோன்றிய நீ எம்முயிரைக் காக்கின்றாய்.
- ❖ உன் பாதங்களை நாங்கள் என்றும் துதிப்போம்.
- ❖ இவ்வாறு பாரதத்தாயின் பெருமைகளைப் பாரதியார் புகழ்ந்துரைத்துள்ளார்.

**5. செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியவற்றை விளக்குக.**

- ❖ பிடவம்பூவும், வேங்கைப்பூவும் ஒரு சேரத்தோன்றுவது போன்ற வடிவத்தை கொண்டது குருளைகள்
- ❖ இக்குருளைகள் தசைப்பகுதியிலிருந்து வெளிவராத நகங்களைக் கொண்டது.
- ❖ இக்குருளைகள் மூன்றையும் ஒரு சேர ஈன்று, பாறையின் பிளவினூடே சோர்வுற்று வலிமையற்று பசியோடு இருந்தது பெண் புலி.
- ❖ பெண் புலியின் பசியைப்போக்க ஆண்புலி மானின் நடமாட்டத்தை ஆராய்ந்து கொண்டிருக்கும்.
- ❖ இத்தகைய கிளைவழிகளை உடைய காட்டிடத்தே வெள்ளிவீதி என்பவள் போல நானும் செல்ல விரும்பினேன்.
- ❖ அவ்வாறு செல்லாம். ஆடல் முதலியவற்றை வெறுத்தேன். உணவும் உண்ணவில்லை. வருந்தி உடலும் மெலிவுற்றது. தோளின் முன்னைய அழகும் கெட்டது.
- ❖ இவ்வாறு தலைவனின் பிரிவை ஆற்ற முடியாமல் அழுகிறேன். என் ஆற்றாமையை போக்க ஒரு மருந்துமின்றி இங்குச் செயலற்று இருந்துவிட்டேன் எனச் செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறினாள்.

**6. அடக்கமுடைமையின் சிறப்பினை வள்ளுவர் எங்ஙனம் விரித்துரைக்கிறார்?**

- ❖ அடக்கம் உடையவர் அமரராய் இன்புறுவர்.
- ❖ அடக்கமில்லாதவர் நரகில் துன்புறுவர்.
- ❖ மக்களுக்கு அடக்கமே மேம்பட்டசெல்வம்.
- ❖ ஆகையால் இதை அழியாமல் காக்க வேண்டும்.
- ❖ அடங்கி வாழ்வனாயின் அதுவே அவனுக்கு மேன்மையைத் தரும்.
- ❖ அடக்கமுள்ளவனின் உயர்வு மலையினும் பெரியது.
- ❖ எல்லோரும் செருக்கின்றி வாழ்வது நல்லது.
- ❖ அதுவே செல்வம் உடையவர்க்கு மற்றொரு செல்வமாகும்.

**7. ஒப்புரவாளனது செல்வம் பயன்படு மாற்றினை விளக்குக.**

- ❖ ஒப்புரவாளனிடம் உள்ள செல்வம் ஊர் நடுவே உள்ள நீர்நிறைந்த குளம் போல யாவர்க்கும் பயன்படும்.
- ❖ பழுத்துப் பயன்படும் மரம் ஊர் நடுவே பழுத்து விளங்கினால் அது எல்லோருக்கும் பயன்படும்.
- ❖ தன் எல்லா உறுப்புகளும் மருந்தாகிப் பயன்படும் மரம்போல எல்லோருக்கும் எல்லா வகையிலும் எளிதில் பெற்றுப் பயன்பெற உதவும்.

**8. அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- ❖ அடக்கம் உடையார் அமரராய் இன்புறுவர். அடக்கமில்லாதவர் நரகில் துன்புறுவர்.
- ❖ அடக்கத்தை விட மேம்பட்ட செல்வம் வேறில்லை. ஆகையால் அதை அழியாமல் காத்தல் வேண்டும்.
- ❖ அடக்கம் நல்லோரால் பாராட்டப்பெறும்.

- ❖ அடங்கி வாழ்பவனின் உயர்வு மலையை விடப்பெரியது.
- ❖ செல்வராயினும் அடக்கத்தோடு இருந்தால், அவ்வடக்கமே மற்றொரு செல்வமாகும்.
- ❖ ஆமைபோல் அடங்கி வாழ்ந்தால் அது ஏழு பிறவிக்கும் காவலாய் அமையும்.
- ❖ நாவடக்கம் இல்லாதவர் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.
- ❖ தீயசொல் பேசுவதால், பிற அறங்களால் ஏற்படும் நன்மையும் தீமையாய் முடியும்.
- ❖ நாவினால் சுடுதலானது தீயினால் சுடுதலைவிட கொடியது.
- ❖ மன அடக்கம் உடையவனை அறம் தானாய்த் தேடி வந்தடையும்.

**9. ஒப்புரவறிதல் பற்றிய கருத்துகளை எழுதுக.**

**"உலக நடையை அறிந்து உதவி வாழ்தல் - ஒப்புரவு"**

- ❖ கைம்மாறு கருதாது பெய்யும். மழை போல, பிறருக்கு உதவும் ஒப்புரவுகளும் மறு உதவிகளை வேண்டுவன அல்ல.
- ❖ ஒருவர் முயற்சி செய்து ஈட்டிய செல்வம் முழுவதும் தகுதி உடையவர்க்கு உதவுவதற்கே ஆகும்.
- ❖ தேவர் உலகத்திலும், இவ்வுலகத்திலும் ஒப்புரவு போல நல்ல பிற செயல்களைப் பெறுதல் அரிது.
- ❖ பிறருக்கு உதவி வாழ்பவனே உயிர் வாழ்பவன் ஆவான். அதனை அறியாதவர் உயிருடன் வாழ்ந்தாலும் இறந்தவராய்க் கருதப்படுவர்.

**ஒப்புரவாளனிடம் உள்ள செல்வம்,**

- ❖ ஊர் நடுவே உள்ள நீர்நிறைந்த குளம்போல யாவர்க்கும் பயன்படும்.
- ❖ ஊர் நடுவே உள்ள பழுத்தமரம் போல யாவர்க்கும் பயன்படும்.
- ❖ தன் எல்லா உறுப்புகளும் மருந்தாகி பயன்படும் மரம்போல எல்லோருக்கும் எல்லா வகையிலும் பயன்படும்.
- ❖ ஒப்புரவாளர் தன்னிடம் உள்ள செல்வம் சுருங்கிய காலத்திலும் பிறருக்கு உதவ மனம் தளர மாட்டார்.
- ❖ பிறருக்கு ஒப்புரவு (உதவி) செய்யும் குணம் உடையவனுக்கு, அங்ஙனம் செய்ய முடியாமல் வருந்துவதே மிக்க வறுமையாகும்.
- ❖ பிறருக்கு ஒப்புரவு செய்வதால் கேடு ஏற்படின். அக்கேட்டைத் தன்னை விற்றாவது கொள்ளத்தக்கதாகும்.

**10. காலமறிதல்-வள்ளுவர் உரைப்பனவற்றை விளக்குக.**

- ❖ தன்னை விட வலிய கோட்டானை காகம் பகலில் வெல்லும். அதுபோல வலிய பகைவரை காலம் அறிந்து வெல்ல வேண்டும்.
- ❖ காலத்தோடு வினைசெய்வதே செல்வத்தைப் பிணிக்கும் கயிறாகும்.
- ❖ கருவியும் காலமும் அறிந்து செய்தால் முடியாத காரியம் இல்லை.
- ❖ காலம் கருதிச் செய்தால் முடியாத காரியம் இல்லை.
- ❖ காலம் கருதிச் செய்தால், இவ்வுலகத்தை ஆளக் கருதினாலும் கைகூடும்.
- ❖ உலகம் முழுவதையும் கைக்கொள்ளக் கருதுபவர் அதற்கேற்ற காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர்..
- ❖ ஆட்டுக்கிடாய் தன் பகை ஆட்டுக்கிடாய் மீது பாயப் பின் வாங்குவது போல, பகைவரைத் தாக்க உரிய காலம் வரை காத்திருத்தல் வேண்டும்.
- ❖ அறிவுடையோர் தம் பகைவரை வெல்ல, அதற்கேற்ற காலம் வரும்வரை தம் மனத்திலேயே கோபம் கொண்டிருப்பர்.
- ❖ பகைவரை அழிக்கும் காலம் வரும் வரை பணிந்தொழுக வேண்டும். ஏற்றகாலம் வாய்த்ததும் அவரை அழிக்க வேண்டும்.
- ❖ ஏற்றகாலம் வாய்த்த போது, செய்தற்கு அரிய செயல்களை எல்லாம் செய்துமுடித்தல் வேண்டும்.
- ❖ இரையை எதிர்நோக்கியிருக்கும் கொக்கு போல காத்திருந்து, தக்க இரையைக் கண்டவுடன் அது செயல்படுவது போல, விரைந்து செயல்பட்டுச் செயலை முடிக்க வேண்டும்.

**11. வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளை விளக்குக.**

- ❖ ஒருவன் செயல்வலிமை, தன் வலிமை, மாற்றான் வலிமை, துணைவலிமை ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றில் தன்வலிமை மிகுந்திருந்தால் ஒரு செயலைச் செய்ய வேண்டும்.
- ❖ செய்யக்கூடியதைத் தெரிந்து, அதற்கான வழிமுறைகளை அறிந்து செயல்பட்டால் அது நிச்சயம் வெற்றி பெறும்.
- ❖ தன் வலிமையின் அளவை அறியாமல் ஒரு செயலை மேற்கொண்டால், தோல்வியுற்றுக் கெடவோ, வினையைக் கைவிடவோ நேரும்.
- ❖ தன்னுடைய வலிமை அறியாமல் தற்பெருமை கொள்பவன் விரைவாய்க் கெட்டழிவான்.
- ❖ மெல்லிய மயிலிறகே - ஆயினும் அளவுக்கதிகமாய் ஏற்றினால் வண்டியின் அச்சு முறியும். அதுபோல எளியர் பலர் கூடினால் வலியர் ஆவார்.

- ❖ மரக்கொம்பின் நுனிவரை ஏறியவர் அதனோடு அமையாது, மேலும் ஏற முயன்றால் அம்முயற்சியே அவருக்கு அழிவைத் தரும்.
- ❖ தன்பொருள் வைப்பு முறையில் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அளவறிந்து கொடுப்பதே முறையாம்.
- ❖ பொருள் வரவு குறைவு ஆயினும் செலவு மிகாது இருப்பின் அதனால் கேடு உண்டாகாது.
- ❖ அளவறிந்து வாழவேண்டும். அப்படி இல்லையெனில் வாழ்க்கை உள்ளது போலத் தோன்றி இல்லாமல் அழிந்தொழியும்.
- ❖ தன்னிடம் உள்ள பொருளின் அளவை ஆராயாமலே ஒப்புரவை மேற்கொண்டவனின் செல்வம் விரைவில் அழியும்.

**12. நாவடக்கம் பற்றி திருவள்ளுவர் கூறுவன யாவை?**

- ❖ ஒருவன் தன் நாவினை அடக்கி ஆள வேண்டும். இல்லையெனில் சொற்குற்றம் ஏற்பட்டுத் துன்புறுவான்.
- ❖ ஒருவன் கூறும் தீய சொற்களால் பிறர்க்குத் துன்பம் ஏற்படுமானால் அவன் செய்த பிற அறங்களால் ஏற்படக்கூடிய நன்மையும் தீமையாய் முடியும்.
- ❖ "தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
  நாவினாற் சுட்ட வடு" என்பதற்கேற்ப,
- ❖ நெருப்பினால் சுட்டப்புண் உடலில் இருந்தாலும் மனத்தில் ஆறிவிடும். ஆனால் நாவினால் புண்படும்படி பேசியது என்றும் ஆறாத் தழும்பாய் இருந்து துன்புறுத்தும்.

**13. சீவகன் நன்றெனக் கண்ட யாழின் சிறப்புகள் யாவை?**

- ❖ சீவகன் நன்றெனக் கண்ட யாழ் செய்யப்பட்ட மரத்தை அம்மரத்தை மண்மகள் பெற்றாள் என்றும்,
- ❖ வானம் என்னும் வளர்ப்புத் தாயானவள், மின்னல் என்னும் பொன் நாணினையுடைய மேகத்தின் அருளால் இனிய பாலை ஊட்டினாள் என்றும்,
- ❖ எனவே அம்மரம் நோய் நான்கும் நீங்கப்பெற்று அழகு நலம் விளங்க வளர்ந்தது என்றும்,
- ❖ பின்பு வாள் கொண்டு வெட்டப்பட்ட அம்மரத்தால் செய்யப்பட்ட இனிமையான யாழ் இது என்றும் யாழின் சிறப்புகளைக் கூறினான்.

**14. சீவகன் யாழின் பால்கண்ட குற்றங்கள் எவை?**

- ❖ இது நீரில்லாமல் மெலிந்துபோன மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது நீரிலே இருந்து அழுகிய மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது முறையற்ற வாளினால் வெட்டப்பட்ட மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது இடி தாக்குண்ட மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது உழவர்களால் சுடப்பட்டு வெந்த மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது முறையற்ற வேசிமகன் போல் சிறப்பில்லாதது.
- ❖ இது ஆண்யானை தழுவ முறிந்த மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இறுதியாக இந்த யாழ் நரம்பிசையால் குறைபாடுடையது இவையே சீவகன் யாழின்பால் கண்ட குற்றங்கள் ஆகும்.

**15. சீவகன் காந்தருவதத்தையை யாழ்ப்போட்டியில் வென்ற நிகழ்ச்சியை தொகுத்து எழுதுக.**

- ❖ கலுழவேகன் தன் மகள் காந்தருவதத்தையை யாழ்ப்போரிலே வெல்பவர்க்கு மணஞ்செய்து கொடுக்க விரும்புகிறான்.
- ❖ தத்தையின் தோழி வீணாபதி குற்றங்களை உடைய பல வீணைகளைச் சீவகன் முன் வைக்கிறாள்.
- ❖ ஆனால் சீவகன் தன் பரந்த அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து குற்றமுடைய வீணையை கீழ்க்கண்டவாறு ஒதுக்கினான்.

**சீவகன் யாழின் பால்கண்ட குற்றங்கள்:**

- ❖ இது நீரில்லாமல் மெலிந்துபோன மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது நீரிலே இருந்து அழுகிய மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது முறையற்ற வாளினால் வெட்டப்பட்ட மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது இடி தாக்குண்ட மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது உழவர்களால் சுடப்பட்டு வெந்த மரத்தால் செய்யப்பட்டது.
- ❖ இது முறையற்ற வேசிமகன் போல் சிறப்பில்லாதது.
- ❖ இது ஆண்யானை தழுவ முறிந்த மரத்தால் செய்யப்பட்டது.

**சிறந்த யாழைத் தேர்ந்தெடுத்துச் சிறப்புகளைக் கூறுதல்:**

- ❖ சீவகன் நன்றெனக் கண்ட யாழை மண்மகள் பெற்றாள் என்றும்,

- ❖ அம்மரத்தை வானம் என்னும் வளர்ப்புத் தாயானவள், மின்னல் என்னும் பொன் நாணினையுடைய மேகத்தின் அருளால் இனிய பாலை ஊட்டினாள்.
- ❖ எனவே இம்மரம் நோய் நான்கும் நீங்கப்பெற்று அழகு நலம் விளங்க வளர்ந்தது.
- ❖ பின்பு வாள் கொண்டு வெட்டப்பட்டு அம்மரத்தால் இந்த யாழ் செய்யப்பட்டது என்றும் கூறினான்.
- ❖ பின்னர் நரம்பின் முறுக்கை தளர்த்தி அதில் இருந்த முடியை நீக்கி தன் தம்பி நபுலனிடம் நரம்பு வாங்கி யாழில் அமைத்துக்கொண்டான்.

**தத்தையின் தோல்வி:**

- ❖ தத்தை சீவகன் மேல் கொண்ட காதலால் பண்ணும் பாடலும் வேறுபட்டு புதமையாகப் பாடினாள்.
- ❖ தத்தை பாடிய பாட்டும் இசையும் வேறு வேறாய் இருந்தன.
- ❖ தத்தை சீவகன் மேல் கொண்ட காதலினால் எதிர்ப்பாட்டு பாட முயன்று குரல் நடுங்கித் தோற்றாள். பின் சீவகனுக்கு மாலை சூட்டினாள்.

**16. இடஞ்சுட்டி பொருள் விளக்குக. "நரம்பொடு வீணை நாவின் நடந்ததோ"**

இடம் : சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தை யாழ்மீட்டிப் பாடுவதைக் கேட்டோர் கூறியது.

பொருள் : காந்தருவதத்தை பாடியதைக் கேட்டப் பலரும் யாழ் தனக்குரிய நரம்புடன் பாடாமல், வீணை தான் நாவால் பாடியதோ என்றனர்.

விளக்கம் : காந்தருவதத்தை வாய்திறந்து பாடும்போது இசை மரபுக்கேற்ப பாடினாள். அதைக்கேட்டோர் அதிசயித்து யாழ்தான் தனக்குரிய நரம்புடன் பாடாமல் வீணைக்குரிய நாவைப் பெற்றுப் பாடியதோ என அரசர் முதலானோர் கூறினர்.

**17. பாம்பின் செயலும் அபூபக்கரின் செய்கையும் யாவை?**

**பாம்பின் செயல்:**

- ❖ அண்ணல் நபிபெருமான் அபூபக்கர் மடியின் மீது துயில் கொண்டார்.
- ❖ அப்போது அருகிலிருந்த புற்றின் வழியே பாம்பு ஒன்று தலையை நீட்டியது.
- ❖ இதைக்கண்ட அபூபக்கர் நபியின் தூக்கம் கலையாது இருக்க சிந்தித்தார்.

**அபூபக்கரின் செய்கை:**

- ❖ தம் மேலாடையின் ஒரு பகுதியைக் கிழித்து, பாம்பு வெளிப்படும் வளைதோறும் துணியைச்சுருட்டி வைத்து அடைத்தார்.
- ❖ பாம்பு மீண்டும் மற்றொரு வளையில் தலையை நீட்டியது.
- ❖ மீண்டும் துணியைக்கிழித்து அந்த வளையையும் அடைத்தார்.
- ❖ இவ்வாறு ஒவ்வொரு வளையிலும் பாம்பு தலைக்காட்ட எல்லாவற்றையும் துணியால் அடைத்துக்கொண்டே இருந்தார்.

**18. நபிகள் பெருமான் பாம்பினிடம் வினவியதும், பாம்பின் மறுமொழியும் யாவை?**

**பாம்பினிடம் வினவியது:**

"பாம்பே! ஒரு துன்பமுற்று இம்மலைக்குகைக்கு வந்து தங்கியிருக்கும் நாங்களோ எம் முன்னோர்களோ ஏதேனும் தீங்கு இழைத்துள்ளோமா? நாங்கள் எக்குற்றத்தையும் செய்யவில்லை. அவ்வாறு இருக்க நஞ்சு தலைக்கேற நீ தீண்டியது எக்காரணத்தால்?" என்று பெருமான் வினவினார்.

**பாம்பின் மறுமொழி:**

அதற்குப் பாம்பு,

நீண்ட காலமாய் எதிர்பார்த்திருந்த பலன் நெருங்கிக் கிட்டும் சமயத்தில், அப்பலன் கிட்டாதவாறு தடுப்பவர் எவரானாலும் தண்டிப்பது உலக இயல்பாகும். அதற்கு மாறாய் நான் எத்தவறும் செய்யவில்லை என்று மறுமொழி கூறியது.

**19. அபூபக்கருக்கு பெருமான் நஞ்சு தீர்த்தருளியது யாங்ஙனம்?**

பெருமானின் வாழ்த்தைப் பெற்ற நாகம் அவ்விடத்தை விட்டு அகன்றது. பின் பெருமானார்,

- ❖ அபூபக்கரின் பாதத்தில், பாம்பு தீண்டிய இடத்தில், தம் உமிழ்நீர்த்துளியினை எடுத்து தடவி விட்டார்.
- ❖ நபி பெருமானின் உமிழ்நீர் அபூபக்கரின் உடலில் பரவியிருந்த நஞ்சு முழுவதையும் அணு அளவும் இல்லாது நீக்கியது.
- ❖ அவர் உடலின் மாசு நீங்குமாறு செய்து தூய்மையாக்கி ஒளிபெறச்செய்தது.

**20. ஜே!ஜே! என படைஞர் ஆர்க்கும்படியாய் ஜீவகன் உரைத்தன யாவை?**

புகழ் நிலைத்து நிற்கும் ஜீவகன் தன் படைவீரர்களை நோக்கி,

- ❖ இப்போரில் நீவிர் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் பல யுகங்கள் வரை நிலைத்து நின்று உங்கள் புகழைக்கூறிக் கொண்டிருக்கும்.

**உயிர் மூச்சன்று, சுதந்திரமே.**

- ❖ அந்த இரத்தத்துளிகள், "இந்தப் பாண்டி நாட்டு மக்கள் சுதந்திரத்தைப் போற்றுபவர்கள்.
- ❖ பகைவர்களே அவர்களை நெருங்காதீர்கள்! அவர்களுக்கு உயிர் மூச்சன்று, சுதந்திரமே ஆகும்.
- ❖ இதைக்கனவிலும் நன்றாய்க் கொள்ளுங்கள்" என்று எத்திசையில் உள்ளவர்கட்கும் பறை சாற்றுமே!

**புகழின் காயம்:**

- ❖ இத்தனிப்போரில் நீங்கள் ஏற்கும் காயம் வெற்றித்திருமகள் களிப்புற்று உங்களுக்கு முத்தமிட்டு அளித்த முத்திரையாகி எத்தனையோ தலைமுறைகளுக்குப் புகழின் சின்னமாக விளங்கும்.
- ❖ ஆதலால் அது புகழின் சின்னமாகும்.

**21. பிறந்தார் எனப்படாதார் யார்?**

- ❖ உலகில் ஒவ்வொரு கணத்திலும் எத்தனையோ பேர் பிறக்கின்றனர். எத்தனையோ பேர் இறக்கின்றனர்.
- ❖ அவரெல்லாம் உலகில் பிறந்தவர்களாய் அறிஞர்களால் கருதப்பட மாட்டார்.

**இகழுடம்பு:**

- ❖ இவ்வுலகில் பிறந்தவர்களுக்கு இரு உடம்புகள் உள்ளன.
- ❖ தசை முதலிய பொருள்களால் ஆகி அழியும் தன்மையுடையது. அதன் இழிநிலை கருதி அறிஞர் அதனை இகழ்வர். இது இகழுடம்பு எனப்படும்.

**புகழுடம்பு:**

- ❖ மற்றொன்று, அத்தகைய உடலைக்கொண்டு செய்த நற்செயல்களால் என்றும் அழியாது உலகில் நிலைத்து நிற்பது.
- ❖ அத்தகைய புகழ் உடம்பினையே அறிஞர் போற்றுவர்.
- ❖ அப்புகழ் உடம்பைப் பெறாதவர் பிறந்தார் எனப்படாதவர் ஆவார்.

**22. இடஞ்சுட்டி பொருள் கூறுக. "வெந்தழற் கவரே இந்தனம் ஆகுக"**

**இடம்** : மனோன்மணீயம் என்னும் நூலில் இவ்வடிகள் இடம்பெற்றுள்ளது. இது ஜீவகன் தன் படைவீரர்களை நோக்கி கூறியதாகும்.

**பொருள்** : படைவீரர்களே, நம் மீது படையெடுத்து வந்துள்ள சேர நாட்டு கயவர்கள், உங்கள் மனத்தில் மூட்டிய கோபத்தீக்கு அவர்களே விறகாகி அழியட்டும் என்று ஜீவகன் கூறினான்.

**விளக்கம்** : சேர நாட்டவர் மீது தம்வீரர்களுக்கு சினம் பொங்க வேண்டும் என்பதற்காக ஜீவகன். அவர்கள் மூட்டிய கோபமாகிய நெருப்புக்கு அவர்களே விறகாக ஆகட்டும் என்று கூறுவதன் மூலம் பகைவர்களைத் தாக்கிக் கொன்று குவிக்க வேண்டும் என்பதைக் குறிப்பால் உணர்த்தினான்.

**23. நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டுகளாகப் பாரதியார் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- ❖ காட்டுப் பறவைகள் கலகல என எழுப்பும் ஓசை
- ❖ காற்று மரங்களிடையே வீசி உண்டாகும் ஒலி
- ❖ ஆற்றுநீரோட்டத்தில் உண்டாகும் ஒலி
- ❖ கடல் ஒலிக்கும் ஒலி
- ❖ பெண்கள் அன்பினால் உடல் உருகப் பாடும் பாட்டு
- ❖ நீர் இறைக்கின்ற ஏற்றப்பாட்டு
- ❖ நெல் குத்துகின்ற வளையல் அணிந்த மகளிர் 'குக்கு' என எழுப்புகின்ற ஒலி
- ❖ மணப்பொடியினை இடிக்கின்ற மகளிரின் சுவை மிகுந்த இசை
- ❖ பெண்கள் கும்மி அடித்து பாடும் கூட்டுப்பாடல்
- ❖ ஆடவர் தம் வாய்களாலும். கைகளாலும் புல்லாங்குழல், வீணை முதலான இசைக்கருவிகள் எழுப்புகின்ற இசைப்பாட்டு ஆகியவற்றை நாட்டினிலும் காட்டினிலும் நன்றொலிக்கும் பாடல்கள் எனப் பாரதியார் குறிப்பிடுகிறார்.

**24. தூது இலக்கியத்தின் இலக்கணம் எழுதுக.**

- ❖ தலைவன் ஒருவன்பால் காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலைத் தலைவனுக்கு உரைத்து, அவன் மாலையைப் பெற்று வருமாறு தூது அனுப்புவதாகப் பாடப்படுவது தூது என்னும் இலக்கியமாகும்.

- ❖ தூது தமிழில் வழங்கும் 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- ❖ தெய்வத்திடம் மானிடப்பெண் காதல்கொண்டு தூது விடுப்பதாகவும்,
- ❖ தெய்வத்தோடு ஒப்ப மதிக்கத்தக்க மானிடன்பால் மானிடப்பெண் தூதுவிடுப்பதாகவும் இருவகையாய் தூது அமையும்.
- ❖ தூதுநூல் பாடும் ஆசிரியர் தம்மையே தலைவியாய்ப் பாவித்துக் கொண்டு பாட்டுடைத் தலைவனின் பண்பு நலங்களையும் பெருமைகளையும் பலவாறு புகழ்ந்து பாடுவது மரபாகும்.

**25. அழகர் தம் சிறப்புகளாக அழகர் கிள்ளை விடுதூது கூறுவன யாவை?**

- ❖ நரசிம்ம அவதாரமாக தூணில் இருந்து தோன்றி இரணியனை அழித்தவர்.
- ❖ காக்கும் தொழிலை செய்த திருமால் பூமி முழுவதையும் உண்டவர்.
- ❖ வெண்ணெயுடன், பூதகி என்ற அரக்கி தந்த பாலும் போதாமல் பின்னும் பசித்துப் பிரம்மனைப் பெற்றவர்.
- ❖ எங்கும் நிறைந்து நின்றவர்.
- ❖ உரலுடன் கட்டப்பட்டபோது அதனை இழுத்துச்சென்று மருதமரங்களைச் சாய்த்தவர்.
- ❖ இவ்வாறு பிள்ளைத்தன்மை நீங்காத இயல்புடையவர்.
- ❖ பெண்கள் மடலேற அழகிய புயங்களை கொண்டவர்.
- ❖ சாபத்தால் கல்லாய் இருந்த அகலிகையை மீண்டும் உருப்பெறச் செய்த சிறந்த பாதங்களைக் கொண்டவர்.
- ❖ பாம்பு படுக்கையைத் தலையில் சுமந்தவர்.
- ❖ வானவர்க்கு அமிழ்தம் கடைந்த அழகிய கைகளைக் கொண்டவர்.
- ❖ சீதையுடன் வன்கானகம் சென்றவர்.
- ❖ வேடன் அம்பினால் இவ்வுலகிலிருந்து விடுதலைப் பெற்றவர்.
- ❖ என் காதல் கடலில் மூழ்கியிருப்பவர். பாற்கடலில் மிதந்திருப்பவர்.
- ❖ ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருப்பவர். உலகத்திற்கு அப்பாலும் இருப்பவர்.
- ❖ யார் கண்ணுக்கும் புலப்படாதவர். அருகில் இருந்தும் அகப்படாதவர்.
- ❖ மாயன் என்னும் பெயருக்கேற்ப மறைந்திருப்பவர்.
- ❖ கண்ணன் என்னும் பெயருக்கேற்ப எல்லாப்பொருட்களையும் விளக்கிக் காட்டுபவர்.

**26. அமணர் என்று கூறிப்பிழைத்தாரின் செயல்யாது?**

- ❖ சோழப்படைக்கு அஞ்சிய கலிங்க வீரர்கள் பலர் தப்பிப் பிழைக்க புதர்களில் புகுந்து ஓடினர்.
- ❖ அப்போது அவர்களது தலைமயிரும், உடுத்தி இருந்த ஆடையும் முட்புதரில் சிக்கிப் பறிக்கப்பட்டன.
- ❖ இவ்வாறு பறிக்கப்பட்ட முடியும் போக,
- ❖ மீதமுள்ள முடிகளையும் தாங்களே பறித்துக்கொண்டு நாங்கள், ‘அமணர்’ என்று பொய்க்கூறித் தப்பிப் பிழைத்தனர்.

**27. பாணர் என்று கூறிப் பிழைத்தாரின் செயல் யாது?**

- ❖ சோழப்படைக்கு அஞ்சிய கலிங்க வீரர்கள் பலர் யானைகளின் கழுத்தில் கிடந்த மணிகளை எடுத்துக் கையில் ஏந்திக்கொண்டனர்.
- ❖ நாங்கள் தெலுங்கு பாணர்கள் என்று சொல்லி மணிகளைத் தாளத்துடன் ஒலித்தனர்.
- ❖ மேலும், சேனைகள் மடிந்து கிடக்கும் இப்போர்க்களத்தினைக் கண்டு திகைப்புற்று நிற்கிறோம்.
- ❖ நாங்கள் உங்கள் அடிகளில் வாழும் பாணர்கள் என்று கூறி சோழர்களின் காலில் விழுந்து வணங்கி உயிர் தப்பினர்.

**28. கலிங்க நாட்டில் தப்பிப் பிழைத்தன யாவை?**

- ❖ சோழப்படைவீரர்களுக்கு அஞ்சித் தப்பிக்கும்போது தலைமுடியும், அணிந்த ஆடையும் இழந்த கலிங்க வீரர்கள் ‘அமணர்’ என்று பொய்க்கூறித் தப்பினர்.
- ❖ வில்லின் நாணினைப் பூணூல் ஆக்கி ‘அந்தணர்’ என்று பொய்க்கூறித் தப்பினர், தெலுங்கு பாணர் என்றும் பொய்க்கூறித் தப்பினர்.
- ❖ மேலும், அவர்கள் தவிர மற்ற வீரர்கள் அனைவருமே சோழவீரர்களால் அழிக்கப்பட்டனர்.
- ❖ எனவே ஏழு பிரிவினை உடைய அந்நாட்டின்கண் ஓவியர் எழுதி வைத்துள்ள உடம்புகளே தப்பிப் பிழைத்தன.

**29. ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுமாறு யாங்ஙனம்?**

- ❖ விரல்களால் சுவைக்கப்பட்ட மெல்லிதழ் வறண்டு விடாமல் இருக்க செங்கீரை ஆடி அருள்க!
- ❖ விம்மியும், பொருமியும் உன் மென்மையான குரல் குன்றாமல் செங்கீரை ஆடி அருள்க!
- ❖ கரைந்து வரும் கண்மையோடு கண்கள் சிவந்து விடாமல் செங்கீரை ஆடி அருள்க!
- ❖ மையைக்கரைத்துவரும் கலங்கல் கண்ணீர் அருவி வழிந்து கருத்த உருவமாய் காட்டாதவாறு செங்கீரை ஆடி அருள்க!
- ❖ மணிகள் பதித்த சிறுதொட்டிலை உதைத்து உன் அழகிய திருவடிகள் வலியுறாமல் செங்கீரை ஆடி அருள்க!
- ❖ ஒரு காலை ஊன்றி எழுந்து இரு கைகளை ஒரு சேர நிலத்தின் மீது பதித்து, தலைநிமிர்ந்து முகம் அசைய அசைந்து, இனிமையாய் செங்கீரை ஆடி அருள்க!
- ❖ பழமையான வைத்தீசுவரன் கோயில் என்னும் ஊரில் வீற்றிருக்கும் முத்துக்குமாரசுவாமியே செங்கீரை ஆடி அருள்க!

**30. குறத்தி ஏதன் மலையைப் பற்றி உரைப்பன யாவை?**

**அம்மையே!**

- ❖ நாங்கள் வாழ்வதற்கு முதன்முதலில் இருப்பிடமாய் அமைந்த மலை ஏதன் என்னும் மலையாகும்.
- ❖ ஆண்டவன் எங்களைப் படைத்தது அந்த மலையில்தான்.

**அம்மையே!**

- ❖ நீதி என்ற நால்வரத்தைத் எங்களுக்குக் கொடுத்ததோடு அழிவற்ற வாழ்வு அமைந்ததும் அம்மலையில் தான்.
- ❖ சாத்தான் பொய்தனையே கூறி எங்கள் அறிவைக் கெடுத்ததும் அம்மலையில் தான்.
- ❖ அதை அறிந்து இறைவன் எங்களைச் சாபமிட்டதும் அம்மலையில்தான்.
- ❖ எங்கள் தன்மை வேறுபட்டு நாங்கள் அம்மலையை விட்டு வந்த பின்பு எங்களுக்குப் பெத்தலேகமே பெரிய மலையாய் அமைந்தது.

**31. ஏதன் மலையைப்பற்றி நீவிர் அறிவன யாவை?**

- ❖ உலகைப்படைத்த இறைவன் பூமியில் மனிதனைப்படைத்து, உயிர்க்காற்றை அளிக்க மனிதன் உயிர் பெற்றவன் ஆனான்.
- ❖ தான் படைத்த அனைத்தையும் பயன்படுத்தும் விபரங்களை மாந்தர்களுக்கு இறைவன் வழங்கினார்.
- ❖ ஏதேன் தோட்டத்தை உருவாக்கி, அங்கு இருந்த மரத்தின் கனியை உண்ண வேண்டாம் என இறைவன் விதித்திருந்தார்.
- ❖ அக்கனியை உண்டால் நீ தெய்வமாவாய் என சாத்தான் ஏவாளையும் ஆதாமையும் உண்ண வைத்தது.
- ❖ இறைவன் சொல்லை மீறியதால் அவர்கள் இறைவனால் சபிக்கப்பட்டனர்.
- ❖ ஆகையால் மாந்தர் தம் பாவத்தால் ஏதேன் தோட்டத்தையும் மலையையும் இழந்தனர்.

**32. தமிழ்நாட்டார் எத்தகைய கீர்த்தியைப் பெற வேண்டும் எனக் கவிஞர் கனவு காண்கிறார்?**

- ❖ அனைவரும் கல்வி கற்க வேண்டும்.
- ❖ கலை அறிவாலும், வீரத்தாலும், அன்பாலும் மலை போன்ற உயர்ந்த புகழைப் பெற வேண்டும்.
- ❖ இத்தகைய உயர்வைப் பெற்று, தமிழர் யாவரும் இன்பம் அடைந்தார் என மற்றவர்கள் சொல்லிப்புகழ, அதைக்கேட்க வேண்டும் என்று தமிழ்நாட்டார் அடைய வேண்டிய புகழ்குறித்து பாரதிதாசன் கனவு காண்கிறார்.

**33. கவிஞரின் செவியில் வந்து பாய வேண்டிய செய்தி யாது?**

நம் இனிமைத்தமிழ்த்தாயின் கவிதைகளைப் பிறநாட்டார் ஆயிரம் மொழிகளில் மொழிபெயர்த்திட ஆவல் கொள்கின்றனர் என்ற செய்தி, தேனாறு போல தொடர்ந்து வந்து என் செவியில் பாய வேண்டும் என்கிறார் கவிஞர்.

**34. வையம் கலங்குமாறு தமிழர் செய்யத்தக்கது யாது?**

- ❖ வெள்ளம் போன்ற தமிழர் கூட்டம், அது பெரு வீரம் நிறைந்த கூட்டம்.
- ❖ உடலால் பலர், உள்ளத்தால் ஒருவரே.
- ❖ அவ்வளவு ஒற்றுமை உடையவர்கள் தமிழர்கள்
- ❖ அவர்களை நய வஞ்சகத்தால் பிரித்திட இயலாது என இவ்வையம் கலங்குமாறு ஒற்றுமையாய் வாழ்வதே தமிழர் செய்யத்தக்கதாகும்.

**35. ஆடவரும் மகளிரும் சமானத்தர் ஆக வேண்டும் என்ற கருத்தினைக் கவிஞர் எங்ஙனம் கூறியுள்ளார்?**

- கண்களும் அவற்றின் ஒளிபோல, மலரும் அவற்றின் மணமும் போல, ஆண்களும் பெண்களும் அன்பால் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் சமமானவர்களாய் வாழ்கின்றனர் என்ற செய்தி என் காதில் ஒலிக்க வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்.

**36. பூக்கட்டும் புதுமை என்னும் தலைப்பில் அமைந்துள்ள கவிதை அழகினை விவரி.**

- பூக்கின்ற பூக்களெல்லாம் பூக்கள் அல்ல, உலகில் தோன்றும் புதுமைகள் எல்லாம் புதுமை அல்ல.
- மனம் பரப்பும் பூக்களைத் தான் மக்கள் பூக்கள் என்பர்.
- மக்களுக்கு நன்மை, பாதுகாப்பு வழங்கிடும் புதுமையைத்தான் அவர்கள் புதுமை எனப்போற்றுவர்.
- காகிதப்பூ போன்ற மணமில்லாத புதுமைக்கு அடிமையாக வேண்டாம்.
- இத்தகைய புதுமையை விலக்குவதே அறிவுடைமை.
- சூரியன் வருகையால் தாமரை மலரும், நிலவு வருவதால் அல்லி மலரும்.
- மழை வரவால் பயிர் செழிக்கும்.
- உண்மை பேசும் திருக்குறளால் உலகம் சிரிக்கும்.
- தூயவராம் திருவள்ளுவர் வழிநின்று பொதுவுடைமைச் சமுதாயம் காண முயன்றால் உலகம் விரும்பும் புதுமை பூக்கும்.
- இவ்வாறு புதுமை, புதுமை அல்லாதவற்றையும், காலம் வென்ற புதுமையையும் உவமைகள் வாயிலாக முடியரசன் கூறுவது கவிதைக்கு அழகூட்டுகிறது.

**37. தளை என்னும் பாடல்மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்துகள் யாவை?**

- சோளைக்கொல்லையிலே தட்டையின் தலைப்பகுதி தோறும் முத்துகள் முதிர்ந்து வளர்ந்துள்ளன.
- வயலின் கதிர்கள் தலைசாயும் வண்ணம் தாள்தோறும் நெல்மணிகள் நிறைந்திருக்கின்றன.
- ‘கொழு கொழு’ வென்று கொழுக்கட்டைப்புல் தோட்டத்திலே வளர்ந்திருக்கிறது.
- பயிர்களெல்லாம் நன்கு செழித்து வளர்ந்த பிறகு அவற்றையெல்லாம் அனுபவிக்க இயலாதவாறு காளை கட்டப்பட்டு இருக்கின்றது.
- ஆலைகளிலும், வயல்வெளிகளிலும் உற்பத்தி பெருக ஏழை உழைப்பாளி அல்லும் பகலும் தன் உழைப்பை அளிக்கிறான்.
- அப்பொருள்களையோ அவற்றை விற்றுப் பெறப்படும் செல்வத்தையோ பெறுபவர்கள் அவ்வுழைப்பில் சிறிதும் பங்குபெறாத உடைமையாளர்கள்.
- உழைப்பை நல்கி பொருளை உருவாக்கிய ஏழை உழைப்பாளிகளோ உடைமையற்றவன் என்னும் தளையால் தடுக்கப்பட்டு ஏக்கம் நிரம்பிய பார்வையோடு வாழ்கின்றனர்.

**38. தண்ணீர் வங்கிகள் என்ற தலைப்பின் கீழ் ந.கருணாநிதி உரைப்பன யாவை?**

- நிலத்தடி நீரையெல்லாம் இயந்திரம் கொண்டு இறைத்து வெளியே கொண்டு வந்து பயன்படுத்தி விட்டோம்.
- வேளாண்மைத்துறையில் பசுமைப்புரட்சித்திட்டத்தின் மூலம் தேவைக்கு அதிகமாகவே தானியங்களை உற்பத்தி செய்துவிட்டோம்.
- இதனால் நிலத்தடி நீர் வறண்டு குடிப்பதற்குக் கூட நீரைக் காசு கொடுத்து வாங்குகிறோம்.
- நாம் வங்கியில் சேமித்த பணத்தை தேவை ஏற்படும் போது செலவழிப்பதைப்போல தண்ணீர் வங்கிகளும் வேண்டும்.
- வானத்திலிருந்து மழைநீரைச் சேகரிக்க வீட்டைச்சுற்றி மண்தரைகள் அமைக்க வேண்டும்.
- இதன் மூலம் எதிர்கால மானிடச்சந்ததியைக் காப்போம் எனக்கூறுகிறார்.

**39. அப்பர் பெருமிதமும், தன்னனம்பிக்கையும் பொதியப் பாடிய பாடல் கருத்தை விளக்குக.**

சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவ சமயத்திற்கு மாறியதால், அப்பரைத் தண்டிக்கும் நோக்கோடு மன்னன் தன் பணியாளர்களை ஏவினான். அப்போது அப்பர்,

**நாம் ஆர்க்கும் குடியல்லோம்:**

- எல்லா உயிர்களுக்கும் தலைவனான சிவனுக்கே நாம் அடிமையாய் உள்ளோம்.
- அவன் திருவடிகளையே அடைக்கலமாய்க் கொண்டு விட்டோம்.
- ஆகவே இவ்வுலகில் எவருக்கும் யாம் பணியோம்.

**நமனை அஞ்சோம்:**

- காலனைக் காலால் உதைத்தவர் சிவன்.
- ஆகவே நான் உங்கள் மன்னனுக்கு மட்டுமல்ல, எமனுக்கும் அஞ்சோம்.

**நரகத்தில் இடர்ப்படோம்:**

- ❖ இருவினைகளை சுட்டெரிக்கும் சிவபெருமானின் பாதமலர்களைப் பற்றிய யாம் நரகம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

**நடலை இல்லோம்:**

- ❖ இவ்வாறு யாம் கூறுவதைப் பொய் எனக்கூற வேண்டாம்.
- ❖ அச்சம் உடையவரே பொய்க்கூறும் அவசியம் உடையவர்.
- ❖ மெய்யான ஒன்றை மேவிய யாம் பொய்யும் இல்லாதவர் ஆவோம்.

**பணிவோம் அல்லோம்:**

- ❖ ஏதேனும் ஒன்றை வேண்டிப் பெறும் நிலையில் இருந்தால் அன்றோ, ஒருவரைப் பணிய வேண்டி நேரிடும்.
- ❖ எல்லாச்செல்வங்களையும் வழங்கக்கூடிய சிவபெருமானைப் பற்றி விட்டோம். ஆதலால் அவரைத்தவிர யாரையும் பணிவோம் அல்லோம்.
- ❖ ஆகவே விருப்பு வெறுப்பற்ற இன்பதுன்பங்களற்ற பிணிமூப்பற்ற சிவபெருமான் திருவடிகளைப் பற்றி எமக்கு இனி அழியாத, “இன்பமே எந்நாளும், துன்பமில்லை எந்நாளும்” என்றார்.

**40. சிலுவைமிசை கண்ட இறைவனது பண்பாய் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை கூறுவன யாவை?**

- ❖ தேவர்களுக்கெல்லாம் தேவனாய் இருப்பவர் இயேசு.
- ❖ அவர் முடிவே இல்லாத இறைவர்.
- ❖ பழமையான திருமறைக்கூறும் பொருளாய் இருப்பவர்.
- ❖ சிறந்த பண்புகளைக் கொண்டவர்.
- ❖ ஒரு பயனும் எதிர்பாராமல் உதவுபவர்.
- ❖ உலகில் உள்ள மக்கள் துன்பத்தால் அழிந்து விடாதபடி காக்க,
- ❖ மனித வடிவம் கொண்டு விடாப்பிடியாய் முன்னின்று நடத்திக் காட்டுபவர்.

**41. வீரசோழிய மேற்கோள் புத்த பெருமானை வழிபடும் அழகை விவரி.**

- ❖ போதி மரத்தின் திருநிழலில் எல்லா உண்மைகளையும் உணர்ந்த புத்த மாமுனிவனே!
- ❖ கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் மக்கள் யாவரும் தொழத்தக்க வகையில் மனம் ஒருமைப்பட்டு வாழ்வாராக!
- ❖ நல்வினை, தீவினை என இருபிணிகள் அகல வாழ்வாராக!
- ❖ காமம், வெகுளி, மயக்கமாகிய முப்பகை வென்று வாழ்வாராக!
- ❖ அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் பொருள்களை உணர்ந்து,
- ❖ நீங்காத இன்பத்தோடு நெடுங்காலம் வாழ்வாராக என்று உன்னை வணங்குவோம்.

## அணியைச் சுட்டி விளக்குக:

**1. நுனிக்கொம்பர் ஏறினார் அ∴திறந்து ஊக்கின்**
**உயிர்க் கிறுதியாகி விடும்.**

**அணி :** பிறிது மொழிதல் அணி

**அணி விளக்கம்** : உவமையைக் கூறி, உவமேயத்தைப் பெற வைப்பது பிறிதுமொழிதலணி ஆகும்.

**பொருத்தம்** : கொம்பின் நுனிவரை ஏறியவர், அதனோடு நில்லாமல் மேலும் ஏற முயன்றால் அம்முயற்சி அவர் உயிருக்கு அழிவைத் தரும். ஆகையால் பகைமேல் சென்ற அரசன் தன் வலிமையால் செல்லும் அளவு கடந்தும் அதனோடு இல்லாமல் செருக்கால் மேலும் முயன்றால் அம்முயற்சி அழிவைத்தரும். இவ்வாறு உவமையைக் கூறி உவமேயத்தைப் பெற வைத்ததால் பிறிது மொழிதல் அணி ஆயிற்று.

**2. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்**

**அணி:** பிறிது மொழிதலணி

**அணி விளக்கம்:** உவமையைக் கூறி, உவமேயத்தைப் பெற வைப்பது பிறிதுமொழிதலணி ஆகும்.

**பொருத்தம்:** மெல்லிய மயிலிறகு தானே என்று அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறியும். ஆகையால் ஒருவன் வலியனே ஆயினும் எளியர் என்று பகைமேல் செல்வராயின் அவர்கள் பலர் கூடினால் வலிமை அழிந்து கெட நேரும். இவ்வாறு உவமையைக்கூறி உவமேயத்தைப் பெறவைப்பது பிறிது மொழிதல் அணி ஆயிற்று

3. **பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**
**அணி:** எடுத்துக்காட்டு உவமையணி.
**அணி விளக்கம்** : உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒருவாக்கியமாகவும் அமைந்து, போல போன்ற உவம உருபுகள் மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.
**உவமை** : பகல்வெல்லும் கூகையைக் காக்கை
**உவமேயம்** : இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது.
**உவம உருபு** : (மறைந்து வருவது) போல
**விளக்கம்** : பகற்பொழுதில் தன்னை விட வலிய கோட்டானை காகம் வென்றுவிடும். அதுபோல தன்னைக்காட்டிலும் வலிய பகைவரைக் காலமறிந்து போரிட்டால் வெல்லலாம்.

4. **வேற்றுமையணியை விளக்குக.**
**அணி விளக்கம்:** இரு பொருள்களுக்கு ஒப்புமை கூறி பின்னர் வேறுபடுத்தி, ஒன்றை விட ஒன்று உயர்ந்ததாய் கூறுவது வேற்றுமையணி.
(எ.டு) தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.
**விளக்கம்:** தீயினால் சுடுதலும் நாவினால் சுடுதலும் ஒப்புமை தோன்றக் கூறப்பட்டன. தீயால் சுட்டப்புண் ஆறும். நாவினால் சுட்டது ஆறாது என வேறுபடுத்திக் கூறப்பட்டமையால் வேற்றுமையணிக்குப் பொருத்தம் ஆயிற்று.

5. **கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து.**
**அணி** : தொழில் உவமையணி.
**அணி விளக்கம்:** உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் மற்றொரு வாக்கியமாகவும் அமைந்து போல என்று உவம உருபு பெற்று வருவது உவமையணியாகும். கொத்துகின்ற தொழிலைக் குறிப்பதால் இது தொழில் உவமையணி ஆயிற்று.
**பாடல் பொருள்:** தனக்குரிய இரையாகிய பெரிய மீனை எதிர்பார்த்து அமைதியாய் காத்திருந்து, அம்மீன் வந்தவுடன் தவறாமல் குத்தி எடுத்துக்கொள்ளும் கொக்கு. அதுபோல ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்ற காலம் வாய்க்காத போது அமைதியாய் இருந்து காலம் வாய்த்ததும் அச்செயலைத் தவறாமல் செய்து முடித்தல்.

6. **பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.**
**பாடாண் திணை:**
❖ பாடாண்திணை = பாடு + ஆண் + திணை பாடப்படும் ஆண்மகனின் ஒழுகலாறுகள்
❖ ஒரு மன்னனது புகழ், வலிமை, வள்ளன்மை, அருள் முதலானவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண் திணையாகும்.
❖ பாடப்படுகின்ற ஆண்மகனது ஒழுகலாற்றைக் கூறுவது இத்திணையின் நோக்கமாகும்.

**சான்று:** “வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே”

**சான்று விளக்கம்:**
❖ மழையானது வற்றிய குளத்திலும், விளைநிலத்திலும் பெய்யும்.
❖ அவ்வாறின்றி களர்நிலத்திலும் பெய்யும் இயல்புடையது.
❖ அதுபோல பேகன் இரவலர்க்குக் கொடுப்பதில் அறியாமை உள்ளவனாய் இருப்பான்.
❖ பிறர் படைகொண்டு போரிட்டால் போர்நெறிக்குச் சிறிதும் மாறாமல் அவர்களோடு போரிட்டு வெற்றி பெறுவான்.

## புணர்ச்சி விதி

**1. "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. பொருளனைத்தும் = பொருள் + அனைத்தும்
2. உறுமிடம் = உறும் + இடம்
3. தாளாற்றி = தாள் + ஆற்றி
4. வேலேறு = வேல் + ஏறு
5. தேனினம் = தேன் + இனம்
6. உருமேறு = உரும் + ஏறு
7. புகழுடம்பு = புகழ் + உடம்பு
8. இவரெல்லாம் = இவர் + எல்லாம்
9. நீரோசை = நீர் + ஓசை
10. சித்தரெல்லாம் = சித்தர் + எல்லாம்
11. ஈனமுள்ள = ஈனம் + உள்ள
12. நீருற்று = நீர் + ஊற்று
13. துன்பமில்லை = துன்பம் + இல்லை
14. இடனற = இடன் + அற

**2. ஈறுபோதல் என்னும் விதிப்படி புணர்ந்தது**

1. செம்மலர் = செம்மை + மலர்
2. அருமறை = அருமை + மறை
3. மென்கானகம் = மென்மை + கானகம்
4. வெண்குழை = வெண்மை + குழை
5. முதுசுருதி = முதுமை + சுருதி
6. செம்பொன் = செம்மை + பொன்

**3. ஈறுபோதல், இனமிகல் என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. பழந்தமிழ் = பழமை + தமிழ்
2. பசும் பொன் = பசுமை + பொன்
3. செழும்புகழ் = செழுமை + புகழ்
4. பெருங்கடல் = பெருமை + கடல்
5. அருந்தவங்கள் = அருமை + தவங்கள்
6. பெருந்தமிழ் = பெருமை + தமிழ்
7. கொடுங்கண் = கொடுமை + கண்

**4. "பூப்பெயர் முன் இனமென்மையுந் தோன்றும்" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. பூங்கொடி = பூ + கொடி
2. பூந்தொடை = பூ + தொடை

**5. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் , உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. எம்முயிர் = எம் + உயிர்
2. பண்ணொன்று = பண் + ஒன்று
3. புண்ணெண்ணி = புண் + எண்ணி

**6. "இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. பலாப்பழம் = பலா + பழம்
2. நுனிக்கொம்பர் = நுனி + கொம்பர்

3. தீச்சொல் = தீ + சொல்
4. சிலைத்தொழில் = சிலை + தொழில்
5. துளைப்பல் = துளை + பல்
6. வளைக்கரங்கள் = வளை + கரங்கள்
7. ஆடப்போந்து = ஆட + போந்து
8. கைத்திறம் = கை + திறம்
9. மொழிக்குறள் = மொழி + குறள்
10. மொழிப்பொருளை = மொழி + பொருளை

**7. "உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும் " "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. கருத்ததனுள் = கருத்து + அதனுள்
2. அச்சிறும் = அச்சு + இறும்
3. ஐந்தடக்கல் = ஐந்து + அடக்கல்
4. கொக்கொக்க = கொக்கு + ஒக்க
5. ஆகாறு = ஆகு + ஆறு
6. அமிழ்துறழ் = அமிழ்து + உறழ்
7. மாசற = மாசு + அற
8. அவர்க்குயிர் = அவர்க்கு + உயிர்
9. யார்க்கது = யார்க்கு + அது
10. முரசறையுமே = முரசு +அறையுமே
11. கூட்டமுதும் = கூட்டு + அமுதும்
12. நன்றொலிக்கும் = நன்று + ஒலிக்கும்
13 உண்டருளி = உண்டு + அருளி
14. அமுதூறிய = அமுது + ஊறிய
15. உலகனைத்தும் = உலகு + அனைத்தும்

**8. "லள வேற்றுமையிற் றடவும்" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. கழற்கால் = கழல் + கால்
2. கட்குடம் = கல் + குடம்
3. பொருட்பயன் = பொருள் + பயன்
4. வாட்புண் = வாள் + புண்

**9. "முற்றும் அற்று ஒரோ வழி", "உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. கதவடைப்பு = கதவு + அடைப்பு
2. செலவயர்ந்திசின் = செலவு + அயர்ந்திசின்
3. செறிவறிந்து = செறிவு + அறிந்து

**10. "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்", "இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்" என்னும் விதிப்படி புணர்ந்தது.**

1. அகலத்தொட்டி = அகலம் + தொட்டி
2. சோளக்கொல்லை = சோளம் + கொல்லை
3. காகிதப்பூ = காகிதம் + பூ
4. நிலத்தலைவர் = நிலம் + தலைவர்
5. நிலக்காப்பு = நிலம் + காப்பு
6. கானப்பறவை = கானம் + பறவை
7. வலத்தாள் = வலம் + தாள்

**11. "இஈஜ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும், ஏமுன் இவ்விருமையும் உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும் என்னும் விதிப்படி புணர்ந்தது."**

1. நின்றவொன்றே = நின்ற + ஒன்றே
2. நாவையசைத்த = நாவை + அசைத்த
3. வலியறியார் = வலி + அறியார்
4. தீயெரிந்து = தீ + எரிந்து
5. சேயமுகு = சே + அழகு
6. அருவியொலி =அருவி + ஒலி
7. சேனையருந்தி = சேனை + அருந்தி
8. சுவையுண்டு = சுவை + உண்டு
9. கீர்த்தியெய்தி = கீர்த்தி + எய்தி
10. பிணியறியோம் = பிணி + அறியோம்

**தயாரிப்பு**
**திரு. த. செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி**

**தயாரிப்பில் உதவி**
**திருமதி. நா. தேவிகா சுரேஷ் MA., B.Ed., P.G.D.C.A.,**
**வெற்றிக்கு வழி ஆசிரியர் குழு**